# 18 ஆன்மீக மார்க்கங்கள்

## சைவநாற்பாதங்கள்

***சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்;***
***தாசமார்க்கம் என்றும் சங்கரனை அடையும்***
***நன்மார்க்கம் நாலவைதான் ஞான யோக***
***நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்***
***சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய***
***சாரூப்பிய சாயுச்சிய என்று சதுர்விதமாம்***
***முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி***
***முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதமென்பர் .*** - சிவஞான சித்தியார்

ஆன்மீக விடுதலைக்கான மார்க்கங்களில் சைவநாற்பாதங்கள் முதன்மையானவை. இவை ஞானசாதனங்கள் என்றும் சிவபுண்ணியங்கள் என்றும் அழைக்கப்படும். இச்சைவ சாதனங்களில் சரியையை முதலாகக் கொண்டு, ஞானத்தின் வழி இறைவனை அடையலாம் என்பதனைத் தாயுமானவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் .

***''விரும்பும் சரியை முதல் மெஞ்ஞானம் நான்கும்***
***அரும்பு மலர் காய்கனி போலன்றோ பராபரமே''***

சரியை நெறி என்பது உடம்பினால் இறைவனுக்குச் செய்யும் தொண்டு. கிரியை நெறி என்பது உடலாலும் உள்ளத்தாலும் இறைவனுக்குச் செய்யும் தொண்டு. யோக நெறி என்பது அட்டாங்க யோக வழிநின்று இறைவனை வழிபடுதல். ஞான நெறி என்பது அறிவு வழியில் நின்று இறைவனை அடைதலாகும்.

சரியை என்பது திருக்கோவில் அலகிடல், மெழுகுதல், பூமாலை தொடுத்தல், சிவபெருமானைப் புகழ்ந்து பாடல், தீபமிடல், நந்தவனம் அமைத்தல், சிவனடி யார்க்குப் பணிவிடை செய்தல் முதலியன. சரியை நெறியைத் தாசமார்க்கம் என்றும், இறைவனைத் தமது எஜமானாகக் கொண்டு தொண்டு புரிதுமாகும். நாவுக்கரசர் இத்தொண்டின் வழி நின்று சாலோகம் என்னும் இறைவனுலகை அடையும் அபர முத்தியைப் பெற்றார்.

சிவக்கிரியையாவது புதிய மலர்கள் தூபம் தீபம் திருமஞ்சனம் திருவமுது முதலியன அமைத்து, பஞ்ச சுத்திகளும் செய்து, ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்து,

மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனை பண்ணி, ஆவாகித்து மெய்யன்போடும் அருச்சித்துத் துதித்து வழிபட்டு, அக்கினிகாரியமும் செய்தலாகும். கிரியை நெறி சற்புத்திர மார்க்கம் என்றும் அழைக்கப்படும். இது இறைவனைத் தந்தையாகக் கருதி வழிபடுவதைக் குறிக்கும். திருஞானசம்பந்தர் இத்தொண்டின் வழி நின்று சாமீபம் என்னும் இறைவனோடு அருகில் இருக்கும் அபர முத்தியடைந்தார் .

சிவயோகமாவது ஐம்பொறிகளையும் ஒடுக்கிச் சுவாசத்தை நிலையில் நிறுத்தி, மனத்தை ஒரு வழிப்படுத்தி, உடம்பினுள் ஆறாதாரங்களையும் தரிசித்து, ஆன்மாவானது அவ்வாறு ஆதாரங்களுக்கும் மேலே சென்று, பிரமாந்திரத்தில் ஒழுகும் அமிர்ததாரை ஒழுக்கால் உடம்பு நிலைத்திருப்பதால், பூரணப்பிரகாசமாகிய சிவ சோதியைக் கண்டு, இவ்வாறு நியமமாதி அட்டாங்கங்களோடு கூடிய சமாதி நிலையை அடைந்து, ஆனந்தித்து இருத்தலாம். யோக நெறி என்பது சகமார்க்கம் எனவும்படும், இது இறைவனைத் தோழனாகக் கொண்டு வழிபடுவதைக் குறிக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் இத்தொண்டின் வழி நின்று சாரூபம் என்னும் சிவன் உருவத்தைப் பெறும் அபர முத்தியை அடைந்தார் .

சிவஞானமாவது கலைஞானம் முதலிய யாவற்றையும் கற்றறிந்து, மற்றுஞ் சமயநூற் பொருள்கள் யாவும் பூர்வபக்கம் ஆகக்கண்டு பதி, பசு பாசவிலக்கணங் கூறும் சிவாகம நெறியே சித்தாந்தம் எனத் தெளிந்து, காண்பான், காட்சி, காட்சிப் பொருள் எனப் பிரித்தறியும் அறிவொழிய, அத்துவித முறையிற் சிவத்துடன் கலந்து நிற்றலாகும். ஞான நெறி என்பது சன்மார்க்கம் எனப்படும். இது இறைவனைத் தலைவனாகக் கொண்டு வழிபடுபடுவதைக் குறிக்கும். மணிவாசகர் இத்தொண்டின் வழி நின்று சாயுச்சியம் என்னும் சிவத்தோடு இரண்டறக் கலக்கும் பர முத்தியைப் பெற்றார் .

## |õØ£õu E£õ¯ E s ø© { ø »PÒ

மேலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் உபாயநிலை பதினாறும் உண்மைநிலை பதினாறும் என முப்பத்திரண்டு வகைப்படும். அவற்றின் விரிவினை நோக்கின் உபாயச் சரியை, உபாயக் கிரியை, உபாய யோகம், உபாய ஞானம் எனவும் உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் எனவும் இரு பிரிவாகும்.

புகழ் முதலிய உலகப் பயனை நோக்கிச் செய்யும் சிவபுண்ணியங்கள் உபாயச் சரியை முதலியனவாகும். பக்தி காரணமாகச் செய்யும் சிவபுண்ணியம் உண்மைச் சரியை முதலியனவாகும்.

உபாயச் சரியை உண்மைச் சரியை இரண்டும் சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம்: கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம்: யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்திர் ஞானம்: ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை,

ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என ஒவ்வொன்றும் நான்கு நான்காய் முப்பத்திரண்டு வகைப்படும்.

### *சரியையிற் சரியை முதலியன:*

திருக்கோயில் அலகிடல் மெழுக்கிடல் முதலியன சரியையிற் சரியை. ஏதாவதொரு மூர்த்திகளில் ஒன்றைப் பூசித்தல் சரியையிற் கிரியையாகும். மனத்தினில் உருத்திரக் கடவுளைத் தியானஞ்செய்தல் சரியையில் யோகமாகும். இத்தியானத் தாக்கத்தினால் நிகழும் அனுபவ உணர்வு சரியையில் ஞானமாகும்.

### *கிரியையிற் கிரியை முதலியன:*

சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களை ஆயத்தம் செய்து கொடுத்தல் கிரியையிற் சரியையாகும். சிவாகமங்களிற் கூறியவாறு பூதசுத்தி, மந்திரசுத்தி, திரவிய சுத்தி, ஆன்ம சுத்தி, சிவலிங்கசுத்தி முதலிய ஐவகைச் சுத்தி முன்னாக சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை கிரியைற் கிரியையாகும். அகத்தே பூசை ஓமம் தியானம் என்னும் மூன்றினுக்கும் இதயம், உந்தி, புருவநடு ஆகிய மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தர் யாகம் கிரியையில் யோகமாகும். இந்த அந்தர்யாக உறைப்பினால் நிகழும் அனுபவ அறிவு கிரியையில் ஞானமாகும்.

### *யோகத்திறி சரியை முதலியன:*

இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியையாகும். பிரத்தியாகாரமும் தாரணையும் யோகத்தில் கிரியையாகும். தியானம் யோகத்தில் யோகமாகும். சமாதி யோகத்தில் ஞானமாகும்.

### *ஞானத்திற் சரியை முதலியன:*

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடுதல் முதலிய நான்கினுள் கேட்டல் ஞானத்திற் சரியையாகும். சிந்தித்தல் ஞானத்தில் கிரியையாகும். தெளிதல் ஞானத்தில் யோகமாகும். நிட்டை கூடுதல் ஞானத்தில் ஞானமாகும். இதனை வேறு விதமாகவும் நூல்கள் விளக்குகின்றன. சிவனடியாரையும் சிவலிங்கப் பெருமானையும் மெய்யன்போடு வழிபடுதல் ஞானத்தில் சரியை என்றும், பூதசுத்தி முதலிய ஐந்துவித சுத்திகளும் செய்து வழிபடுதல் ஞானத்தில் கிரியை என்றும், யான், எனது என்னும் செருக்கற்று, அருளோடு கூடி அவ்வருளேயாய் நிற்றல் ஞானத்தில் யோகம், என்றும் சிவத்தோடு அத்துவிதமாய் நிற்கும் நிலை ஞானத்தில் ஞானம் என்றும் சொல்லப்படும்.

## பாடச் சுருக்கம்

சரியை, கிரியை,யோகம், ஞானம் ஆகிய நான்கும் வைநாற்பாதங்கள் என்றும் சிவ புண்ணியங்கள் என்றும் அழைக்கப்படும்.

நாற்பாதங்களைப் பின்பற்றுவதனால் மலபந்தம் நீக்கமுறும்.

சரியை நெறி என்பது உடம்பினால் இறைவனுக்குச் செய்யும் தொண்டு. கிரியை நெறி என்பது உடலாலும் உள்ளத்தாலும் இறைவனுக்குச் செய்யும் தொண்டு. யோக நெறி என்பது அட்டாங்க யோக வழிநின்று இறைவனை வழிபடுதல். ஞான நெறி என்பது அறிவு வழியில் நின்று இறைவனை அடைதலாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் உபாயநிலை பதினாறும் உண்மைநிலை பதினாறும் என முப்பத்திரண்டு வகைப்படும்.

அவற்றின் விரிவினை நோக்கின் உபாயச் சரியை, உபாயக் கிரியை, உபாய யோகம், உபாய ஞானம் எனவும் உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் எனவும் இரு பிரிவாகும்.

புகழ் முதலிய உலகப் பயனை நோக்கிச் செய்யும் சிவபுண்ணியங்கள் உபாயச் சரியை முதலியனவாகும். பக்தி காரணமாகச் செய்யும் சிவபுண்ணியம் உண்மைச் சரியை முதலியனவாகும்.

உபாயச் சரியை உண்மைச் சரியை இரண்டும் சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம்: கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம்: யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம்: ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என ஒவ்வொன்றும் நான்கு நான்காய் முப்பத்திரண்டு வகைப்படும்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நாற்பாதங்களைத் தாயுமானவர் எவற்றிற்கு ஒப்பிடுகின்றார்
2. நாற்பாதங்களில் நின்று இறைவனை வழிபாடாற்றுகையில் பின்பற்றும் மார்க்கங்களையும் கிடைக்கும் முத்திப் பேற்றினையும் ஒழுங்குபடுத்துக.
3. நாற்பாதங்களில், ஒவ்வொரு நெறியிலும் நின்ற சமயப்பெரியார்கள் இருவரைக் குறிப்பிடுக.
4. நாற்பாதங்களின் உபாய, உண்மை நிலைகள் எத்தனை என்பதனைக் குறிப்பிடுக.
5. உமது வாழ்க்கையில் நீர் கடைப்பிடிக்கத்தக்க மார்க்கம் ஒன்றைக் குறிப்பிட்டு, அம்மார்க்கத்தினைத் தெரிவு செய்வதற்கான காரணத்தினையும் எழுதுக.

## செயற்பாடு

பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| நெறி | நாயன்மார்கள் | மார்க்கம் | செயற்பாடுகள் | முக்தி | முத்தி பெற்றோர் | சிறப்பிக்கும் பாடல் |
|---|---|---|---|---|---|---|
| சரியை | | | | | | |
| கிரியை | | | | | | |
| யோகம் | | | | | | |
| ஞானம் | | | | | | |

# சிவசின்னங்களும் தீட்சைகளும்

## (A) ]Á] ßÚ [PÒ

சிவனைப் பரம்பொருளாகக் கொள்வது சிவநெறி. சைவசமயத்தில் ஒருவர் பிறந்துவிட்டால் மாத்திரம் அவர் சைவராகி விடமுடியாது. தமது வாழ்வில் சைவ ஆசாரங்கள், சைவ ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பவரே உண்மைச் சைவராவார். சிவநெறி நிற்கும் சைவர்களுக்கு உரிய சிவ சின்னங்கள் விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம், என்பனவாகும். இச்சிவசின்னங்கள் சிவபெருமானைக் குறித்து நிற்பன. சைவமக்களால் இவை அணியப்பெற்றும் துதிக்கப்பெற்றும் வருபவை. சிவசின்னங்களைக் காணும்போது அவற்றைச் சிவமாகக்கருதி வழிபட்டு வருதல் வேண்டும்.

### *1. விபூதி*

அழியாத ஞானத்தையும் செல்வத்தையும் கொடுப்பதால் ‘விபூதி’ என்றும், தீவினை அனைத்தையும் நீறுபடுத்துவது என்பதால் ‘திருநீறு’ என்றும், தீமைகளிலிருந்து இரட்சிப்பதால் ‘இரட்சை’ என்றும், ஆன்மாக்களின் மல மாசைப் போக்குவதால் ‘பசிதம்’ என்று பலவாறு பெயர் சுட்டப்பெறும். விபூதி எப்போதும் இறைவனை நினைப் பூட்டுவதால் மனம், வாக்கு, காயம் என்பன தூய்மை பெற்றுவிடுகின்றன. ஆதலால் சைவ மக்களின் பண்பு வளர்ச்சியிலே திருநீற்றின் பங்களிப்பு மிகமுக்கிம் பெறுவதை உணர்த்தவே ஔவையார், ‘‘நீறில்லா நெற்றி பாழ்’’ என்று பாடுகின்றார்.



வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தேவாரத் திருமுறைகள், சிவனடியார் வரலாறுகள் என்பவற்றால் திருநீறு மகிமைப் படுத்தப்பட்டுள்ளது. கோயிற் கிரியைகள், பூசை வழிபாடுகள், ஏனைய சைவக்கிரியைகள் யாவற்றிலும் திருநீறு முக்கிய இடம் வகிக்கின்றது. சிவப்பிரசாதமாக அடியார்களுக்கு வழங்கப்படுகின்றது. மந்திரமும், மருந்துமாக உடல் நோய்களைத் தீர்க்கவும், பிறவிப் பிணியறுக்கவும் சைவ மக்கள் விபூதியைப் பயன்படுத்துகின்றனர்.

இத்தகைய சிறப்புக்கள் பல பொருந்திய விபூதி கற்பம், அனுகற்பம், உப கற்பம், அகற்பம் என நால்வகைப்படும். குற்றமில்லாத பசுவின் சாணத்தினை முறைப்படி அக்கினியால் சுட்டு வெண்ணீறானதை எடுத்து மலர்கள் இட்டுப் பத்திரப்படுத்தியது கற்பம் எனவும், சித்திரை மாதத்தில் காட்டிலே உலர்ந்து கிடக்கின்ற சாணத்தை அக்கினியாற் சுட்டுப் பத்திரப்படுத்துதல் அனுகற்பம் எனவும், இரு மரங்கள் இணைந்து உரோஞ்சுதலின் எரிந்து, தானேயுண்டான நீறு உபகற்பம் எனவும், மலைகளிலும் நிலங்களிலும் இயற்கையில் விளைந்த திருநீற்றைச் சுத்தி செய்து எடுப்பது அகற்பம் எனவும் அழைக்கப்படும்.

விபூதியை நாம், வடக்கேயாயினும் கிழக்கேயாயினும் பார்த்து அண்ணாந்து வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் 'சிவசிவ' என்று உச்சரித்து நிலத்திற் சிந்தாமல் நெற்றியில் அணிய வேண்டும். சுவாமி, அக்கினி, குரு, சிவனடியார்கள் முன் முகத்தைத்திருப்பி நின்று தரித்தல் வேண்டும். நிலத்தில் சிந்தினால் அதை எடுத்து சுத்தம் செய்யவேண்டும். உடம்பில் பரவப் பூசுதல் உத்தூளனம் எனப்படும். நீரில் குழைத்து மூன்று குறியாகத் தரித்தல் 'திரிபுண்டரம்' எனப்படும். தீட்சை பெற்றவர்களே திரிபுண்டரமாய் அணியவேண்டும்.

**2. உருத்திராக்கம்**

சிவபக்தர்கள் அணிய வேண்டிய சின்னங்களுள் உருத்திராக்கமும் ஒன்றாகும். உருத்திர + அக்கம் உருத்திராக்கமாகியது. சிவபெருமான், இடையூறுகளை எல்லாம் நொடியில் நீக்கி எல்லாத் துன்பங்களையும் துடைக்கவல்ல 'அகோரம்' என்னும் மகாஸ்திரத்தை ஆயிரம் வருடங்கள் கண்மூடி மனத்தில் தியானித்துக் கடுந்தவம் புரிந்தார். அவர் தவமுடிவில் கண்களைத் திறந்த பொழுது முக்கண்களிலிருந்தும் மூன்று துளிகள் வீழ்ந்தன. அவையே உருத்திராக்கம் ஆயிற்று. வலது கண்ணாகிய சூரிய விழியிலிருந்து வந்தநீரிலே பன்னிரண்டு வகையான உருத்திராக்கங்கள் கபில நிலத்தோடு தோன்றின. இடது கண்ணாகிய விழியிலிருந்து பதினாறுவகையான உருத்திராக்கங்கள் வெண்மையான நிறத்தில் தோன்றின. மூன்றாவது கண்ணாகிய அக்கினி விழியிலிருந்து கறுப்பு நிறத்தில் பத்து வகையான உருத்திராக்கங்கள் தோன்றின. உருத்திராக்கத்தின் மேற்பாகத்தில் பிராமாவும், நடுப்பாகத்தில் உருத்திரனும், கீழ்ப்பாகத்தில் விஷ்ணுவும் என்றவாறு மும்மூர்த்திகளின் ஒருமித்த வடிவமாக இருப்பதாகவும் விளக்கம் கூறுவாருமுண்டு.



உருத்திராக்க மாலை ஒரே முகமுடைய வகையாய் இருத்தல் வேண்டும். பல முக மணிகள் ஒரே மாலையிற் சேர்த்தல் முறையாகாது. முகத்தோடு முகமாக அமைய இடையில் வெள்ளி, பொன், பவளம் முதலிய ஏதேனும் இடப்பட்டிருக்க வேண்டும். மாலையின் தொங்கல் இரண்டையும் சேர்த்து முடியுமிடத்தில் அதேவகையான முகமுடைய பெரிய மணி ஒன்றை செபமாலையில் இட்டு முடிவது மரபாகும். மார்பில் தரிக்க வேண்டிய மணிகள் பெரியதாய் முப்பத்திரண்டு இருக்கவேண்டும். செபமாலையில் சிறுமணிகளால் நூற்றெட்டு, ஐம்பத்து நான்கு, இருபத்தேழு மணிகள் இருக்க வேண்டும் என்று சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன.

கோயிலுக்குப் போகும் போதும் விரதம், சிரார்த்தம் அனுட்டான காலங்களிலும் புண்ணிய தலயாத்திரை செய்யும் போதும் தீர்த்தம் ஆடும்போது வேறு சுப காலங்களிலும் உருத்திராக்கம் தரித்தல் அதிக பலன்தரவல்லது. சிரம், கழுத்து, காது,

மார்பு, கைகள் முதலிய அங்கங்களிலே தரித்தல் நன்று. உருத்திராக்கம் பக்தி, ஞானம், மனோசக்தி என ஆத்மபலத்தைக் கொடுப்பதோடு நோயற்ற வாழ்வு, தேகபலம் ஆகியவற்றையும் வழங்கவல்லது.

**3. பஞ்சாட்சரம்**

பஞ்ச + அட்சரம் என்னும் ஐந்து எழுத்துக்களால் ஆனது. சிவசின்னங்கள் விபூதி, உருத்திராக்கம் எமது கண்களுக்கும் புலப்படக் கூடியன. ஆனால் பஞ்சாட்சர மந்திரமோ அப்படியல்ல. இதன் உண்மையை ஓதியும், செபம் செய்தும், மனனம் செய்தும்தான் அறியலாம். மந்திரம் என்பது தம்மை உச்சரிப்பவரைக் காப்பது. எனவே சைவர்கள் தவறாமல் உச்சரிக்க வேண்டியது 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரமாகும். பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பினை நாயன்மார்கள் நமசிவாயப் பதிகத்தில் பாடியுள்ளனர்.

ஓங்காரமும் சிவமூலமந்திரமும் ஐந்தெழுத்து எனப்படும். இவற்றுள் ஓங்காரத்தில் ஐந்தெழுத்தும் ஓரெழுத்தாய் அமைந்து இருத்தலால் சூக்கும பஞ்சாட்சரம் எனப்படும். 'சிவாயநம' என்னும் பஞ்சாட்சரத்தில் சி - சிவத்தினையும் வா - திருவருட்சக்தியையும் ய - ஆன்மாவையும் ந - திரோதன சக்தியையும் ம - மலங்களையும் குறிப்பனவாகும்.

பஞ்சாட்சரத்தில் 'சிவாயநம' என்பது சிகராதி பஞ்சாட்சரம் எனவும் 'நமசிவாய' என்பது நகராதி பஞ்சாட்சரம் எனவும் இருவகைப்படும். முத்தியை விரும்புவோர் சிகராதி பஞ்சாட்சரத்தையும், இவ்வுலக இன்பங்களை நாடுவோர் நகராதி பஞ்சாட் சரத்தினையும் செபிப்பர். வடக்கு, கிழக்கு முகமாக தூய்மையான இடத்தில் இடது காலின்மேல் வலது காலைவைத்து, நிமிர்ந்து உட்கார்ந்து கண்கள் மூக்கு நுனியைப் பொருந்த மானசமாக திருவைந்தெழுத்தைச் செபிக்க வேண்டும். இவ்வாறு ஓதுவது உத்தம முறையாகும். தன்செவிக்குக் கேட்க செபித்தல் மத்திமம், பிறர் செவிக்குக் கேட்பின் அதமமாகும்.

## (B). wmø\PÒ

தீட்சை என்ற சொல்லை தீ + ஷை எனப்பிரிப்பின் 'தீ' என்பது கொடுத்தல் எனவும் 'ஷை' என்பது கெடுத்தல் எனவும் பொருள்தரும். எனவே தீட்சை என்றால் ஆன்மாக்களுக்கு மலத்தைக் கெடுத்து, ஞானத்தைக் கொடுப்பது என்பதாகும். தீட்சை பெற்றவர்களே உண்மையான சைவ சமயிகள். சைவ சமயத்தவர்களுக்குத் தீட்சை பெறுதல் மிகப் பிரதானமாகும்.

சைவ சமயத்தில் தீட்சை பெறாதவர் அருட்பாக்களை ஓதுவதற்கும், புராணங்களைப் படிப்பதற்கும் ஞான சாத்திரங்களைக் கேட்டல், படித்தலுக்கும், பிரதிட்டை, விவாகம், அந்தியேட்டி, சிரார்த்தம் போன்ற சமயக் கிரியைகளைச் செய்வதற்கும், செய்விப்பதற்கும் தகுதி உடையவராகார்.

நமது உடம்பின் புற அழுக்கை நீரினால் சுத்தம் செய்வது போல், உள்ளிருக்கும் சூக்கும உடம்பினையும் அதில் உள்ள தீய அழுக்குகளையும் ஆசமனம், மந்திர செபம் முதலான அனுட்டானக் கிரியைகளினாலேயே போக்கமுடியும். இவற்றினைச் செய்வதற்கு வேண்டிய பயிற்சியும் முயற்சியும் தேவை. அதனை உணர்ந்தே நம் சமயத்தில் ஏழு வயதில் தீட்சை பெறவேண்டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் கால், கைகளை அடக்கி ஆளும் பக்குவமும், மனதில் இச்சைகள் தோன்றி விருத்தியாகக்கூடிய காலமும் அப்பருவ காலத்திலிருந்துதான் தோன்றுகின்றது என்பதனாலேயே அவ்வயதில் தீட்சை பெறுவது கடமையாக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வயதில் தீட்சை பெற்றிருந்தால் அனுட்டான சாதனங்களினால் தேகத்தையும் மனத்தையும் அடக்கி நம் வசப்படுத்தவும், தீச்செயல்கள் தோன்றாமலும் தடுக்கமுடியும்.

சைவசமயி ஒருவர் பெறவேண்டிய தீட்சைகள் மூன்று வகைப்படும். அவையாவன சமயதீட்சை, விசேடதீட்சை, நிர்வாண தீட்சை என்பவையாகும்.

### 1.சமய தீட்சை:

ஆசாரிய அபிஷேகம் பெற்ற கிரியா குரு ஒருவரிடம் முதலில் பெறும் தீட்சையாகும். அனுட்டானம், பஞ்சாட்சர செபம், சமயத் தொண்டுகள் மற்றும் கிரியைகள் யாவற்றையும் செய்யவும், செய்விக்கவும் தகுதி நல்குவதாகும். இத்தீட்சை பெற்றவரே சைவசமயி ஆவார். இத்தீட்சை சரியை நெறியைக் கடைப் பிடிப்போர்க்கு உகந்தது.

### 2.விசேட திட்சை:

சமய தீட்சை பெற்றுச் சாதனம் செய்து, பக்குவம் முதிர்ந்தபின் ஆசாரியாரிடத்தில் இரண்டாவதாகப் பெறும் தீட்சையாகும். இது பெற்றவர்கள் ஆன்மார்த்த பூசைசெய்து புறமும் உள்ளும் இறைவனின் அருவுருவத் திருமேனியை வணங்கலாம். இவர்களே சிவ பூசைக்காரர்கள் என்று அழைக்கப்படுவார்கள். இத்தீட்சை கிரியைநெறியைக் கடைப்பிடிப்போர்க்கு உகந்தது.

### 3.நிர்வாண தீட்சை:

முதல் இரண்டு தீட்சைகளும் பெற்றுப் பக்குவம் முதிர்ந்தவர்கள் ஆசாரியாரிடம் இத்தீட்சையைப் பெறுவர். இத்தீட்சை அசத்தியோ நிர்வாணம், சத்தியோ நிர்வாணம் என இருவகைப்படும். அசத்தியோ நிர்வாணதீட்சை முற்றாகவே பற்றற்ற நிலையில் இருப்பவர்க்கு உடனே தேகத்தோடு முத்தியைக் கொடுப்பது, சத்தியோ நிர்வாண தீட்சை ஆன்மாக்கள் பிரார்த்த வினைப் பயனை அனுபவித்து முடிந்தபின் முத்தியைக் கொடுப்பது. இது பெற்றவர்கள் அருவத் திருமேனியாய்ச் சிவத்தை அகத்திலே வழிபாடு செய்வார்கள். இத்தீட்சை ஞானநெறியைக் கடைப்பிடிப்போர்க்கு உகந்தது.

நிர்வாண தீட்சை பெறுவோர்களுள் அபரமுத்தி முதலிய போகங்களை விரும்புவோர்க்குச் செய்யப்படுவது லோகதர்மிணி. மற்றவர்களுக்கச் செய்யப்படுவது

சிவதர்மிணி. சிவதர்மிணி பெறுவோருள் உடனே முத்தி அடைவோர் சத்தியோ நிர்வாணத்தையும், தேகாந்தத்தில் முத்தி அடைவோர் அசத்தியோ நிர்வாணத்தையும் பெறுவர்.

### ஆசாரிய அபிடேகம்

நிர்வாண தீட்சை பெற்ற ஒருவர் குருப்பட்டம் பெறுவதற்காகச் செய்யப்படும் கிரியை ஆசாரிய அபிடேகம் எனப்படும். குருப்பட்டம் பெற்றோர் பிறருக்குத் தீட்சை கொடுக்கவும், பரார்த்த பூசை செய்யவும் தகுதியைப் பெறுவர். இவர் சிவாச்சாரியார் எனவும் அழைக்கப்படுவார். சிவாச்சாரியாருக்கு இருக்க வேண்டிய தகைமைகளைச் சிவாகமங்கள் மேல்வருமாறு கூறுகின்றன.

1. திருமணம் முடித்து, இல்லறம் நடத்துபவராக இருக்க வேண்டும்.
2. உடல், உளக் குற்றமற்றவராக இருத்தல் வேண்டும்.
3. கல்வி அறிவும் ஒழுக்க மேம்பாடும் மிக்கவராக இருத்தல் வேண்டும்.
4. சைவ நாற்பாதங்களில் பயிற்சி உடையோராக இருத்தல்.
5. சீடர்களுக்குச் சிறந்த ஒழுக்கத்தையும் சைவபாரம்பரியத்தையும் போதிப்பவராக இருத்தல் வேண்டும்.
6. பதினாறு தொடக்கம் எழுபது வயதிற்குட்பட்டோராக இருத்தல் வேண்டும்.

சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை ஆகிய மூவகைத் தீட்சைகளையும் கிரியா குரு அளிக்கும் போது, ஏழுவகையில், ஏதாவது ஒருவகையில் சீடனின் பக்குவ நிலைக்கேற்ப வழங்குவார். அவை எவை என நோக்குவோம்.

### 1. நயன தீட்சை

ஆசாரியார் சிவமாக நின்று சீடனைத் தலைதொடக்கம் கால்வரையும் அருட்பார்வையாற் பார்த்து அவனுடைய ஆணவத்தைக் கெடுத்தல். கண்ணால் பார்த்தல். குரு அருளோடு சீடனைப் பார்த்து, ஆணவ மலத்தை நீக்கலாகும். இது கருட தியானி தன் பார்வையால் விஷம் ஏறப்பெற்றவனுக்கு விஷம் நீக்குதல் போன்றது.

### 2.பரிச தீட்சை

ஆசாரியார் தம்முடைய கையைச் சிவபெருமானுடைய திருக்கரமாகப் பாவித்து சீடனுடைய தலையில் வைத்து அவனுடைய மாயாமலத்தைக் கெடுப்பதாகும். கைகளால் தொடுதல். குரு தனது வலது கரத்தைச் சிவகரமாகப் பாவித்து, சீடன் சிரசில் வைத்து மந்திரம் செபித்து உடம்பு முழுவதும் தடவி, அவன் மாயா வலியை அடக்கல். இது பறவை முட்டையைத் தீண்டிக் குஞ்சாக்குவது போன்றதாகும்.

**3.வாசக தீட்சை**

திருவைந்தெழுத்தையும் பதினொரு மந்திரங்களையும் அந்தந்த எழுத்துக்குரிய மாத்திரைகளோடு உபதேசித்தல். குரு மந்திரங்களைச் சீடனுக்கு உபதேசித்து அவனை ஆசீர்வதித்தல்.

**4.மானச தீட்சை**

யோக மார்க்கத்தால் ஆசாரியார் சீடனுடைய மனத்திற் பிரவேசித்து ஆன்மபோகத்தை நீக்கிச் சிவபோகத்தை உண்டாக்குதல். குரு சீடனைத் தனது அருள் உருவாய்ப் பாவித்து, யோக மார்க்கத்தால் அவன் மனதில் பிரவேசித்து, ஆன்ம போகத்தை நீக்கல். இது ஆமை நீர்நிலையின் கரையில் இருந்தவாறே, முட்டையை மனோ பாவனையால் குஞ்சாக்குவது போன்றதாகும்.

**5.யோக தீட்சை**

குரு சீடனுடைய இதயத்தில் பிரவேசித்து ஆன்மாவைச் சிவத்தோடு சேர்த்தல் சிவயோகத்தை அப்பியாசிக்கும்படி உபதேசித்தலாகும்.

**6.சாஸ்திர தீட்சை**

சைவசமய உண்மைகளையும், ஆசார அனுட்டானங்களையும் சுருக்கி அறியச் செய்தலாகும்.

**7.ஔத்திரி தீட்சை**

ஓமம் சம்மந்தமானது. குண்டம், மண்டலம் அமைத்து, அக்கினி வளர்த்துச் செய்யப்படுகிறது. இது கிரியாவதி என்றும் ஞானாவதி என்றும் இரண்டு வகைப்படும்.

*(i). கிரியாவதி:*

குண்டம், மண்டலம் மற்றும் வேண்டிய பொருட்கள் யாவற்றையும் புறத்தே கொண்டு ஓமக்கிரியை செய்வதாகும்.

*(ii). ஞானாவதி:*

குண்டம், மண்டலம் மற்றும் பொருட்கள் யாவற்றையும் மனத்தினால் கற்பித்துக் கொண்டு கிரியைகளை ஞான மயமாய்ச் செய்வதாகும்.

நோய் முதலிய காரணங்களினால் தீட்சைக்குரிய அனுட்டானங்களைச் செய்ய இயலாதார்க்கு அவ்வனுட்டானங்கள் ஆகுதியாற் சுத்திசெய்து ஒழிக்கப்படும். அது நிர்ப்பீசம் எனப்படும். மற்றவர்களுக்குச் செய்யப்படும் தீட்சை சபீசம் எனப்படும். ஔத்திரிக்கு அருகல்லாதார்க்கு நயனம் முதலிய அறுவகைத் தீட்சைகள் செய்யப்படும்.

## பாடச் சுருக்கம்

சிவநெறி நிற்கும் சைவர்களுக்கு உரிய சிவ சின்னங்கள் விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம், லிங்கம், ரிஷபம், திரிசூலம்,சந்தனம், குங்குமம் முதலியனவாகும். இச்சிவசின்னங்கள் சிவபெருமானைக் குறித்து நிற்பன.

மந்திரமும், மருந்துமாக உடல் நோய்களைத் தீர்க்கவும், பிறவிப் பிணியறுக்கவும் சைவமக்கள் விபூதியைப் பயன்படுத்துகின்றனர்.

விபூதி கற்பம், அனுகற்பம், உப கற்பம், அகற்பம் என நால்வகைப்படும்.

மார்பில் தரிக்க வேண்டிய மணிகள் பெரியதாய் முப்பத்திரண்டு இருக்கவேண்டும். செபமாலையில் சிறுமணிகளால் நூற்றெட்டு, ஐம்பத்து நான்கு, இருபத்தேழு மணிகள் இருக்க வேண்டும் என்று சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஓங்காரமும் சிவமூலமந்திரமும் ஐந்தெழுத்து எனப்படும். இவற்றுள் ஓங்காரத்தில் ஐந்தெழுத்தும் ஒரெழுத்தாய் அமைந்து இருத்தலால் சூக்கும பஞ்சாட் சரம் எனப்படும். 'சிவாயநம' என்னும் பஞ்சாட்சரத்தில் சி - சிவத்தினையும் வா - திருவருட்சக்தியையும் ய - ஆன்மாவையும் ந - திரோதன சக்தியையும் ம - மலங்களையும் குறிப்பனவாகும்.

சைவசமயி ஒருவர் பெறவேண்டிய தீட்சைகள் மூன்று வகைப்படும். அவையாவன சமயதீட்சை, விசேடதீட்சை, நிர்வாண தீட்சை என்பவையாகும்.
நோய் முதலிய காரணங்களினால் தீட்சைக்குரிய அனுட்டானங்களைச் செய்ய இயலாதார்க்கு அவ்வனுட்டானங்கள் ஆகுதியாற் சுத்திசெய்து ஒழிக்கப்படும். அது நிர்ப்பீசமெனப்படும். மற்றவர்களுக்குச் செய்யப்படும் தீட்சை சபீசம் எனப்படும். ஔத்திரிக்கு அருகல்லாதார்க்கு நயனம் முதலிய அறுவகைத் தீட்சைகள் செய்யப்படும்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சிவசின்னம் என்றால் என்ன?
2. விபூதியின் வேறு பெயர்கள் யாவை? அதற்கான காரணங்கள் யாவை?
3. உருத்திராக்கம் தோன்றிய கதையைச் சுருக்கி எழுதுக.
4. உருத்திராக்கம் தரிக்கும் காலங்கள் எவை?
5. ஒருவர் சைவசமயி ஆவதற்கு செய்யவேண்டிய சடங்கு யாது?
6. எழுவகைத் தீட்சைகளும் எவை? அவற்றின் முக்கியத்துவம் யாது?

## செயற்பாடு

தீட்சைகளின் வகைகளையும் அவற்றின் விளக்கத்தினையும் அட்டவணைப்படுத்துக.